




**We Shine Academy™**

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 09.03.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- அறிவியல் நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்







## இந்திய நிகழ்வுகள்

- **நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் பெண்களின் பங்கேற்பு** தொடர்பான **தரப் பட்டியலில் இந்தியா** உலகளவில் **12ஆவது இடத்தில்** உள்ளது. இயக்குநர் குழுவில் பெண்களின் பங்கேற்பு குறித்து உலகளவில் 36 நாடுகளில் 7,824 பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.
    - பட்டியலிடப்பட்ட 628 இந்திய நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் **55 சதவீதம் பெண் இயக்குநர்கள் இடம்பெற்றிருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டது.**
    - **செய்தித் துளிகள் :**
        - இந்தியாவில் நிறுவனங்களின் நிர்வாக குழுவில் ஆண் இயக்குநர்களின் சராசரி பதவிக்காலம் மூன்றாண்டுகளாக உள்ளது. அதேசமயம், உலகளவில் நிர்வாக குழுவில் உள்ள பெண்களின் சராசரி பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாக மட்டுமே உள்ளது என அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- சமீபத்தில் **ஜீனோம் இந்தியா திட்டம்** (Genome India Project - GIP) என்ற ஒரு **மரபணு குறியாக்கத் திட்டத்திற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சகமானது ஒப்புதல்**

அளித்துள்ளது.

- ஜீனோம் இந்தியா திட்டம் என்பது மருத்துவம், விவசாயம் மற்றும் வாழ்க்கை அறிவியலில் புதிய செயல்திறனை செயல்படுத்த உதவும் 20 நிறுவனங்களின் ஒத்துழைப்பாகும்.
- **செய்தித் துளிகள் :**
  - இது இந்திய மக்களைப் பாதிக்கும் நோய்கள் மற்றும் குணாதிசயங்களின் வகை மற்றும் தன்மையை முழுமையாக புரிந்து கொள்வதற்காக இந்திய “குறிப்பு மரபணுவின்” தொடரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ரஞ்சி கோப்பைக்கான முதல் தர கிரிக்கெட் போட்டியின்** முதல் ஆட்டத்தில் அதிக வயதில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற **சாதனையைப் படைத்தார் புதுச்சேரி வீரர் சாந்தமூர்த்தி.**
  - இதன் மூலம் 125 ஆண்டுகால சாதனையை அவர் முறியடித்தார்.
  - **செய்தித் துளிகள் :**
    - கடந்த 1895-ஆம் ஆண்டு இங்கிலாந்து வீரர் பிரெட் ரைட் என்பவர் முதல் தர கிரிக்கெட் போட்டியில் அதிக வயதில் **(40 வயது 49 நாள்கள்) அறிமுகமான முதல் ஆட்டத்தில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதே** இதுவரை சாதனையாக இருந்தது.

- **அகில இந்திய அளவில் மாற்று திறன் ஆண்களுக்கான** வாள்வீச்சு போட்டி, **பெண்களுக்கான வாள்வீச்சு போட்டியில் தமிழகம் அணி முதலிடத்தை** பிடித்தது.
    - தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத்திறனாளர் நலவாழ்வு சங்கம் சார்பில், அகில இந்திய விளையாட்டு போட்டி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியில் உள்ள உள்விளையாட்டு அரங்கில் வெள்ளிக்கிழமை (06.03.2020) தொடங்கியது.
    - **செய்தித் துளிகள் :**
        - இதில், ஆண்களுக்கான வாள்வீச்சு போட்டி, பெண்களுக்கான வாள்வீச்சு போட்டியில் தமிழகம் முதலிடத்தைப் பிடித்தது.
        - இதுபோல, அமர்ந்து விளையாடும் வாலிபால் போட்டி, அமர்ந்து விளையாடும் கபடிபோட்டி, நின்று விளையாடும் கபடி போட்டியில் தமிழக அணி முதலிடத்தை பிடித்தது
        - இந்த போட்டி நிறைவு விழா 09.03.2020ல் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுகளை ஜெயா கல்வி குழுமத்தின் நிறுவனர் ஏ.கனகராஜ் வழங்கினார்.

- **ஐசிசி மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின்** ஒரு பகுதியாக இந்தியாவுக்கு எதிரான இறுதிச் சுற்றில் 85 ரன்கள் வித்தியாசத்தில் வென்ற **ஆஸ்திரேலியா அணி 5-ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைக்** கைப்பற்றியது.

- முதலில் ஆடிய நடப்பு சாம்பியன் ஆஸி. அணி 184/4 ரன்களைக் குவித்தது. பின்னர் ஆடிய இந்திய அணியால் 99 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.
- **செய்தித் துளிகள்**
    - 2010, 2012, 2014, 2018ஆம் ஆண்டுகளில் ஏற்கனவே உலகக் கோப்பையை வென்றுள்ளது ஆஸ்திரேலியா.
    - **கேப்டன் - மெக் லானிங்**
    - பயிற்சியாளர் - மத்தேயு மோட்

## திருக்குறள்

**குறள் : 132**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : ஒழுக்கமுடைமை

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

**தேரினும் அஃதே துணை**

**விளக்கம்** : ஒழுக்கத்தை வருந்தியும் பாதுகாத்தல் வேண்டும். ஏனென்றால், அரண்கள் எல்லாவற்றுள்ளும் ஆராய்ந்து பார்த்தால் அவ்வொழுக்கமே சிறந்த துணையாக உள்ளது.